Illustration: 1

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Case No: CC. 2/2023

Prosuection witness: 1

| | |
|---|---|
| Name : | Caste : |
| Father's Name: | Calling : |
| Village: | Religion : |
| Taluk: | Age: |

வாக்குமூலம்

| | |
|---|---|
| நீதிமன்றம் | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியல் |
| வழக்கு எண் | CC. 2/2023 |
| வழக்கு சாட்சி | 1 |

| | |
|---|---|
| பெயர்:திரு. கானிங் பிரபு | ஜாதி: |
| தந்தை பெயர்: | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது : |

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

01-02-2023

முதல் விசாரணை:

நான் நுள்ளிவிளையில் வசித்து வருகிறேன். நான் டி.என் 75. கே. 5492 என்ற எண் கொண்ட டெம்போ வாகனத்தை வைத்து ஓட்டி வருகிறேன். வழக்கமாக எனது வாகனத்தை எனது வீட்டின் முன்பாக இரவு நேரங்களில் நிறுத்தி வைத்திருப்பேன். 05.03.2022 ம்தேதி மாலை 6.00 மணி அளவில் மேற்படி வாகனத்தை என் வீட்டு முன்பாக நிறுத்தியிருந்தேன். மறுநாள் காலையில் 6.00 மணிக்கு வண்டியை இயக்கும்போது வண்டி இயங்கவில்லை. இறங்கி வந்து வண்டியை சோதனை செய்துப் பார்த்த போது எனது வண்டியில் இருந்த அமரான் பேட்டரியைக் காணவில்லை. இதைப்போல் எங்கள் வீட்டு அருகில் நிப்பாட்டப்பட்டிருந்த வாகனங்களிலும்

பேட்டரிகளை காணவில்லை. இது சம்மந்தமாக நான் இரணியல் காவல்நிலையத்தில் புகார் மனு ஒன்றுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுநான் கொடுத்தது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

டி.என் 75 கே. 5492 எண் கொண்ட டெம்போ வாகனத்தின் உரிமையாளர் நான் தான். மேற்படி வாகனத்தை நான் விலைக்கு வாங்கி 9 வருடங்கள் ஆகின்றன. நான் மேற்படி டெம்போ வாகனத்தை வேறு ஒரு நபரிடம் இருந்து இரண்டாவதாக கிரயம் பெற்றேன். நான் வீட்டிற்கு முன்னால் உள்ள சாலையோரத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தேன். நான் 05.03.2022 ம் தேதி இரவு 11.00 மணி அளவில் வாகனத்தை வீட்டு முன்பாக சாலையோரத்தில் நிறுத்தினேன். அதன் பிறகு மேற்படி வாகனத்தை எனது வீட்டில் வேறு யாரும் எடுக்கவில்லை. மறுநாள் காலை 6.00 மணி அளவில் வாகனத்தை எடுக்கச் சென்றேன்.

நான் போலீசாரிடம் புகார் மனு கொடுக்கும் போது டெம்போ வாகனத்தின் ஆவணங்களையும் கொடுத்தேன். நான் புகார் அளிக்கும்போதும், போலீஸ் விசாரணையிலும் டெம்போ வாகனத்தின் பேட்டரியை யார் திருடினார்கள் என்று தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன்.

மறுவிசாரணை

இல்லை.

Illustration: 1

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Case No: 2/2023

Prosuection witness: 2

| | |
|---|---|
| Name : | Caste : |
| Father's Name: | Calling : |
| Village: | Religion : |
| Taluk: | Age: |

வாக்குமூலம்

| | |
|---|---|
| நீதிமன்றம் | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியல் |
| வழக்கு எண் | CC. 2/2023 |
| வழக்கு சாட்சி | 2 |

| | |
|---|---|
| பெயர்:திரு. சுபாஷ் | ஜாதி: |
| தந்தை பெயர்: | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது : |

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

01-02-2023

முதல் விசாரணை:

நான் நுள்ளிவிளையில் வசித்து வருகிறேன். நான் டி.என் 75. ஏ. 1801 என்ற எண் கொண்ட டெம்போ வாகனத்தை வைத்து ஓட்டி வருகிறேன். வழக்கமாக எனது வாகனத்தை எனது வீட்டின்பக்கத்தில் ரோட்டு ஓரமாக இரவு நேரங்களில் நிறுத்தி வைத்திருப்பேன். 05.03.2022 ம்தேதி மாலை 5.00 மணி அளவில் மேற்படி வாகனத்தை என் வீட்டின் அருகே நிறுத்தியிருந்தேன். மறுநாள் காலையில் 07.00 மணி அளவில் வண்டியை இயக்கும்போது வண்டி இயங்கவில்லை. இறங்கி வந்து வண்டியை சோதனை செய்துப் பார்த்த போது எனது வண்டியில் இருந்த Exide பேட்டரியைக் காணவில்லை. இதைப்போல் எங்கள் வீட்டு அருகில்

நிப்பாட்டப்பட்டிருந்த வாகனங்களிலும் பேட்டரிகளை காணவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

மேற்படி வாகனம் ஹெ ன்றி என்பவருக்குச் சொந்தமானது. அந்த வாகனத்தை நான் எனது வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்தேன். நான் 5 வருடங்கள் ஹெ ன்றி என்பவரிடம் ஓட்டுனராக வேலைச் செய்து வருகிறேன். அந்த வாகனத்தை ஹெ ன்றி புதிதாக விலைக்கு வாங்கினார். பொதுவாக வாகனத்தை ஓட்டி முடித்த பிறகு வாகனத்தின் உரிமையாளர் வீட்டில் தான் கொண்டு விடவேண்டும் என்றால் சரிதான்.

என்னை போலீசார் 06.03.2022 ம் தேதி விசாரித்தார்கள். ஹெ ன்றி வாகனத்தின் உரிமையாளராக இருந்த போதிலும் அவர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் வாகனத்தை நிறுத்தி வைத்த பிறகு அதன் உரிமையாளர் ஹெ ன்றி வாகனத்தை எடுத்துச் சென்றாரா என்று எனக்குத் தெரியாது. நான் புகார் மனுவிலும் போலீசார் விசாரணையின் போதும் பேட்டரியை திருடியது யார் என்று எனக்குத் தெரியாது என்று தான் கூறியுள்ளேன்.

மறுவிசாரணை

இல்லை.

Illustration: 1

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.
Case No: 2/2023
Prosuection witness: 3

| | |
|---|---|
| Name : | Caste : |
| Father's Name: | Calling : |
| Village: | Religion : |
| Taluk: | Age: |

வாக்குமூலம்

| | |
|---|---|
| நீதிமன்றம் | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியல் |
| வழக்கு எண் | CC. 2/2023 |
| வழக்கு சாட்சி | 3 |

| | |
|---|---|
| பெயர்:திரு. ஜாண் போஸ்கோ | ஜாதி: |
| தந்தை பெயர்: | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது : |

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

<u>01-02-2023</u>

<u>முதல் விசாரணை</u>:

நான் நுள்ளிவிளையில் வசித்து வருகிறேன். நான் டி.என் 04. 4856 என்ற எண் கொண்ட டெம்போ வாகனத்தை வைத்து ஓட்டி வருகிறேன். வழக்கமாக எனது வாகனத்தை எனது வீட்டின் முன்பாக ரோட்டு ஓரத்தில் இரவு நேரங்களில் நிறுத்தி வைத்திருப்பேன். 05.03.2022 ம்தேதி மாலை 6.30 மணி அளவில் மேற்படி வாகனத்தை என் வீட்டு முன்பாக ரோட்டு ஓரமாக நிறுத்தியிருந்தேன். மறுநாள் காலையில் 5.45 மணிக்கு வண்டியை இயக்கும்போது வண்டி இயங்கவில்லை. இறங்கி வந்து வண்டியை சோதனை செய்துப் பார்த்த போது எனது வண்டியில் இருந்த Exide பேட்டரியைக் காணவில்லை. இதைப்போல் எங்கள் வீட்டு அருகில்

நிப்பாட்டப்பட்டிருந்த வாகனங்களிலும் பேட்டரிகளை காணவில்லை. இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா1, அ.சா2 ஆகியோரின் வீடு எனது வீட்டில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. மேற்படி வாகனம் சவாரிசெல்லும் வாகனம் ஆகும். வாகனம் எனக்குச் சொந்தமானது தான். போலீசார் என்னை புகார் மனு அளித்த மறுநாள் விசாரித்தார்கள். நான் புகர் மனுவிலும் போலீஸ் விசாரணையிலும் வாகனத்தின் பேட்டரியை யார் திருடினார்கள் என்று தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன்.

மறுவிசாரணை

இல்லை.

Illustration: 1

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Case No: 2/2023

Prosuection witness: 4

| | |
|---|---|
| Name : | Caste : |
| Father's Name: | Calling : |
| Village: | Religion : |
| Taluk: | Age: |

வாக்குமூலம்

| | |
|---|---|
| நீதிமன்றம் | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியல் |
| வழக்கு எண் | CC. 2/2023 |
| வழக்கு சாட்சி | 4 |

| | |
|---|---|
| பெயர்:திரு. நிசாந்த் | ஜாதி: |
| தந்தை பெயர்: | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது : |

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

01-02-2023

முதல் விசாரணை:

நான் மொட்டவிளையில் வசித்து வருகிறேன். நான் டி.என் 75. சி 0505 என்ற எண் கொண்ட டெம்போ வாகனத்தை வைத்து ஓட்டி வருகிறேன். வழக்கமாக எனது வாகனத்தை எனது வீட்டின் முன்பாக ரோட்டு ஓரத்தில் இரவு நேரங்களில் நிறுத்தி வைத்திருப்பேன். 05.03.2022 ம்தேதி மாலை 6.00 மணி அளவில் மேற்படி வாகனத்தை என் வீட்டு முன்பாக ரோட்டு ஓரத்தில் நிறுத்தியிருந்தேன். மறுநாள் காலையில் 6.00 மணிக்கு வண்டியை இயக்கும்போது வண்டி இயங்கவில்லை. இறங்கி வந்து வண்டியை சோதனை செய்துப் பார்த்த போது எனது வண்டியில் இருந்த Exide பேட்டரியைக் காணவில்லை. இதைப்போல் எங்கள் வீட்டு அருகில்

நிப்பாட்டப்பட்டிருந்த வாகனங்களிலும் பேட்டரிகளை காணவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா1, அ.சா.2, அ.சா3 ஆகியோர் பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள். நான் மேற்படி வாகனத்தை 5 வருட காலமாக ஓட்டி வருகிறேன். வாகனம் எனக்குச் சொந்தமானது தான். போலீஸ் விசாரணையின் போது வாகனம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஒப்படைத்தேன். போலீசார் என்னை 2 முறை விசாரித்தார்கள். நான் போலீஸ் விசாரணையிலும் டெம்போ வாகனத்தின் பேட்டரியை யார் திருடினார்கள் என்று தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன்.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.